## கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் - 2017

கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 5428–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவு மற்றும் 2016 யூலை 20 ஆம் திகதிய 5800–எல்கே ஆம் இலக்க மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையில் பங்குபற்றல் நகர பிராந்தியங்களில் தெரிவுசெய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆகையால், செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பங்குபற்றல் நகர பிராந்தியங்களாக கண்டி மற்றும் காலி நகரங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,162.48 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 95 மில்லியன் (ஐ.அ.டொலர் 192.08 மில்லியன்) ஆனதுடன் அதில் ரூபா 19,257 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 147 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மேலும், மேலதிக நிதியளிப்பிற்கான 2016 யூலை 20 இன் 5800–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், யாழ்ப்பாண நகரத்திலுள்ள அபிவிருத்தி வேலை நோக்கத்திற்காக ரூபா 7,975 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 39.90 மில்லியன் (ஐ.அ.டொலர் 65 மில்லியன்) ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 8,250 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 55 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 05 இல் தொடங்கியிருந்ததுடன் கடனின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட வேலை 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மேலதிக நிதியளித்தல் ஒழுங்குகளின் கீழ் யாழ்ப்பாண நகரத்திலுள்ள அபிவிருத்தி வேலைகளின் நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாதிருந்த ரூபா 59 மில்லியன் தொகையான பிடித்துவைத்தல் பணம் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திச் செயற்திட்டத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 12.8 மில்லியன் தொகை மற்றும் நிர்மாண ஒப்பந்தம் ஒன்றின் கீழ் நடவடிக்கைகளை இடைநிறுத்திய ஒப்பந்ததாரரொருவரிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 109 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் என்பன செயற்திட்டத்தால் மூலதனமாக்கப்பட்டிருந்தது. ஆகையால், செயற்திட்டத்தின் மூலதன செலவினம் மேற்குறிப்பிடப்பட்ட தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 24 ஆம் பிரிவுகளின் மூலம் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய முறையே இடைநிலை பெறுபேற்று குறிகாட்டிகளின் கூற்று மற்றும் பெறுகை நிர்வாக கைநூல் என்பன செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 33 (ஊ) பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட பெறுகை செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக்கொண்டு செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் மீதான செயன்முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யக்கூடியவாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம், நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் அரசாங்க பெறுகை வழிகாட்டி என்பவற்றில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றி ஆலோசனையாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் மேற்படி அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் 11 ஆலோசனையாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவர்களிற்கு ரூபா 36 மில்லியன் கூட்டுத்தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

## 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | | | | | | | |
| - 5428 எல்கே | 147.00 | 19,257.00 | 2,614.00 | 11.95 | 1,823.49 | 22.87 | 3,387.00 |
| - 5800 எல்கே | 55.00 | 8,250.00 | 335.00 | 0.29 | 44.72 | 0.29 | 44.72 |
| இலங்கை அரசாங்கம் | 55.08 | 7,405.48 | 505.00 | 3.29 | 502.51 | 7.38 | 1,098.67 |
| **மொத்தம்** | **257.08** | **34,912.48** | **3,454.00** | **15.53** | **2,370.72** | **30.54** | **4,530.39** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், கடன் வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 27,507 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 11 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,431.72 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 23.16 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்ததிலிருந்து 3½ ஆண்டுகள் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும், செயற்திட்டக் காலப்பகுதியினுள் இலக்குகளை அடைவதற்காக பொறுப்புக்களை நிர்ணயித்து செயற்திட்டக் காலப்பகுதி முழுவதையும் மேவுகை செய்து மாதாந்தம், காலாண்டு மற்றும் அரையாண்டு போன்றன ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டி விரிவான விபரமான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்துகின்றதன் செயன்முன்னேற்றம் மெதுவானதாக இருந்தது.

(ஆ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 11 ஆம் பந்தியின் மூலம் வேண்டப்பட்டவாறு செயற்திட்ட வேலைப் பட்டியலை அடிப்படையாகக்கொண்டு மீளாய்வாண்டிற்கான விபரமான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,454 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில், ரூபா 2,370 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக யாழ்ப்பாண நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 335 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.17 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 44.72 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 0.29 மில்லியன் மாத்திரம் காணி சுவீகரிப்பு மற்றும் மீளக்குடியமர்த்துதல் நோக்கங்களிற்கான முறையான வேலைத் திட்டம் காணப்படாமை காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

---------------------------------

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கண்டி மற்றும் காலி நகரங்களில் தெரிவுசெய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதற்காக சில நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. யாழ்ப்பாண நகரத்தில் மேலதிக நிதியளிப்பு ஒழுங்குகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்ட பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், பொதுவான அம்சமொன்றாக, ஒப்பந்ததாரர்களின் நிதி இயலளவுகளை கருத்திற்கொள்ளாமல் ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்தல், ஒப்பந்ததாரர்களால் வேலையிலீடுபடுத்தப்பட்ட தொழில்நுட்ப பதவியணியினர் போதாமை, வடிவமைப்பு ஆலோசனையாளர்களால் தயாரிக்கப்பட்ட வடிவமைப்புக்களில் காணப்படும் பிழைகள் மற்றும் செயற்திட்டத்திலிருந்து அறிவுறுத்தல்களை வழங்குவதிலுள்ள தாமதங்கள் போன்ற செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்ப்படுத்தல் மீதான பல குறைபாடுகள் காரணமாக செயற்திட்டத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட நிர்மாண வேலைகள் மெதுவான செயன்முன்னேற்றத்தை காட்டியிருந்தன. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செயற்திட்ட ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள் உரிய மாநகர சபைகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பவற்றின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் மாவட்ட அடிப்படையில் நடைபெற்றிருக்காதமை அவதானிக்கப்பட்டிருந்தது. ஆகையால், மேலே குறிப்பிடப்பட்ட முகவர்களுக்கிடையில் பொறுப்புக்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு குழுக்களின் கூட்டங்களில் பயனுள்ள தீர்மானங்கள் எடுக்கப்பட முடியாதிருந்தது.

(ஆ) கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாண நகரங்களில் புனரமைப்பு வேலைகளிற்காக ரூபா 19,623 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 131 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 87 ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 8,289 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 55.34 மில்லியன் பெறுமதியான 34 ஒப்பந்தங்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ரூபா 1,065 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் கீழுள்ள 25 உப செயற்திட்டங்களின் கீழான நடவடிக்கைகள் வேலை அட்டவணையின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கடுகஸ்தோட்ட – மடவல – டிகானா வீதியின் மீள்நிர்மாண வேலைகள் மீதான ஒப்பந்தம் ஒப்பந்ததாரரின் மந்தமான செயலாற்றல் காரணமாக 2017 செப்தெம்பர் 06 இல் முடிவுறுத்தப்பட்டிருந்தது. கண்டியிலுள்ள தர்மசோக வீதியின் மீள்நிர்மாண வேலைகள் ஒப்பந்ததாரர்களின் இயலளவுகள் போதாமை காரணமாக ஒப்பந்தம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 18 மாதங்கள் கடந்த பின்னரும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 சதவீத மெதுவான செயன்முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக, ரூபா 631 மில்லியன் கிரயத்தில் கண்டி மெட எல இன் புனரமைப்பு தொடர்பாக வழங்கப்பட்ட 02 ஒப்பந்தங்கள் வேலைத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் 29 சதவீத மெதுவான செயன்முன்னேற்றத்தை காட்டியிருந்தது. ரூபா 855 மில்லியன் கிரயத்தில் மொறகொட கால்வாயில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகள் தேவையான முக்கிய பதவியணியினரின் பற்றாக்குறைகள் மற்றும் ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்பட்ட உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் 22 சதவீத எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது 05 சதவீத மெதுவான செயன்முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்டி தர்மசோக மாவத்தை மற்றும் கடுகஸ்தோட்ட – மடவல – டிகானா வீதி ஆகியவற்றின் 02 ஒப்பந்தங்களின் பொறியியல் மதிப்பீடு முறையே ரூபா 911 மில்லியன் மற்றும் ரூபா 2,156 மில்லியன் தொகையான போதிலும் உரிய ஒப்பந்தங்கள் முறையே ரூபா 727 மில்லியன் மற்றும் ரூபா 1,615 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தன. ஆகையால், வேலையின் மதிப்பிடப்பட்ட கிரயத்திற்கும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட பெறுமதிக்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்பட்டமையை இது சுட்டிக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், முரண்களிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்ததாரர்களிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 351 மில்லியன் கூட்டுத்தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் மீளாய்வாண்டின் இறுதியில் 30 சதவீத மெதுவான செயன்முன்னேற்றம் காணப்பட்டமையால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 49 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் கண்டி நகர சபை கார் தரிப்பிடத்தினை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு ஒப்பந்தக் கடிதம் வழங்கப்படுவதற்கு முன்னர் விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்த வேலைகள் 2018 ஏப்ரல் 30 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்மாண வேலைகளிற்கான ஒப்பந்தம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் வேலை ஆரம்பிப்பு திட்டங்கள் மற்றும் முறைமைக் கூற்றுக்களை பெற்றுக்கொள்ளாமலும் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தின் இரண்டாவது தவணைக்கட்டணத்தை விடுவிப்பதற்கு தேவையான எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை கருத்திற்கொள்ளாமலும் ரூபா 58.82 மில்லியன் ஏனைய வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் கண்டி ரொம்லின் பூங்காவின் முன்னேற்றத்திற்காக 02 தவணைக்கட்டணங்களில் விடுவிக்கப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டத்தின் பெறுகை திட்டம் காணப்படாமையினால் ஐ.அ.டொலர் 44.33 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மீளாய்வாண்டின் போது பூர்த்திசெய்யப்பட வேண்டிய 105 பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 899 மில்லியனிற்கு வழங்கப்பட்ட கட்டபே தண்ணீர் சுத்திகரிக்கும் பொறியின் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு பின்னர் தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரரின் தகுதி மற்றும் தகைமைகள் மீதான விடயங்கள் தொடர்பாக செயற்திட்ட மேன்முறையீட்டுக் குழுவினால் பெறப்பட்ட முறைப்பாடொன்றினை அடிப்படையாகக்கொண்டு புதிய விலைமனுக்களை மீளக்கோருவதற்கு குழுவால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆகையால், கடன்வழங்கும் முகவர் இந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி வசதிகளை குறைத்திருந்தார்.

(உ) 2015 இல் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 950 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் கண்டியில் புயல் நீர் வடிகாலமைப்பு முறைமையின் நிர்மாணத்திற்காக பொருத்தமான ஒப்பந்ததாரரை தெரிவுசெய்யும் செயன்முறை 2017 திசெம்பர் 21 வரையிலும் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், தாமதத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்டி மெட எல புனரமைப்பு நடவடிக்கைகளிற்கான வேலை திட்டங்கள் மற்றும் கிரய மதிப்பீடுகளின் தயாரிப்பு ஆலோசனையாளர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்காததனால் பூர்வாங்க ஆய்வொன்று செய்யப்பட்டோ அல்லது பிரயோகிக்கப்பட்ட தொழில்சார் நியமங்களுடன் இணங்கியோ இருக்கவில்லை. மேலும் பூர்வாங்க ஆய்வுகளின்றி ஆலோசனையாளர்களால் தயாரிக்கப்பட்ட மிகை மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டு ரூபா 53 மில்லியன் மேலதிக தொகையை செயற்திட்டம் செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) கண்டி ரொம்லின் பூங்காவை மேம்படுத்துதல் மீதான ஒப்பந்தத்துடன் தொடர்புடைய அடித்தள வடிவமைப்புக்களிலுள்ள குறைபாடுகள் காரணமாக செயற்திட்டமானது ரூபா 27 மில்லியன் மேலதிக கிரயத்தை ஏற்படுத்தவும் ஒப்பந்த காலப்பகுதியை 3½ மாதங்களால் நீடிப்புச்செய்யவும் வேண்டியிருந்தது.

**3.5 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

2017 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,326 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 8.84 மில்லியன் மீதி மற்றும் 2017 ஏப்ரல் மற்றும் யூன் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,163 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 7.65 மில்லியன் கட்டுநிதி உள்ளடங்கலாக விசேட (டொலர்) கணக்கில் காணப்பட்ட ரூபா 2,473.50 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 16.49 மில்லியன் செலவு மீதியில் ரூபா 1,869 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 12.23 மில்லியன் மாத்திரம் இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்ட உரிய கணக்கிலிருந்து மீளாய்வாண்டின் போது மீளப்பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், ரூபா 634.5 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.26 மில்லியன் மீதியானது செயற்திட்ட நடவடிக்கைகளின் மெதுவான செயன்முன்னேற்றம் மற்றும் நிதித் தேவைப்பாடுகளின் மந்தமான எதிர்வுகூறல் என்பன காரணமாக ஆறு மாத காலப்பகுதிக்கு மேலாக கணக்கில் பயன்படுத்தப்படாதிருந்தது.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மோட்டார் வாகனங்களை வாடகைக்குப் பெறுதல் தொடர்பாக செயற்திட்டத்தால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம், மாதமொன்றிற்கு ஆகக்கூடிய எல்லையான 2500 கிலோமீற்றர்களிற்கும் மேலதிகக் கிலோமீற்றர்களிற்காக மேலதிகக் கட்டணங்களும் செலுத்தப்பட வேண்டியிருந்தது. மேலதிகமாக 133,841 கிலோமீற்றர்கள் ஓடியதற்காக செயற்திட்டத்தால் ரூபா 7.15 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் சில ஏனைய மோட்டார் வாகனங்கள் ஆகக்கூடிய எல்லையைவிட 75,249 கிலோமீற்றர்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) காலி கோட்டை பாதுகாப்பு சுவரின் (Galle Fort Rampart) புனரமைப்பு மீதான அறிக்கையானது ஆரம்ப புலனாய்வு மற்றும் சுற்றாடல் தாக்கத்தின் மதிப்பீடு என்பன இல்லாமல் ஆலோசனையாளர்களால் தயாரிக்கப்பட்டிருந்ததன் விளைவாக ஆய்வின் ஒரே வகை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. ஆகையால், முதலாவது ஆய்வில் ஈடுபட்டுள்ள ஆலோசனையாளரிற்கு செலுத்தப்பட்ட ரூபா 60 மில்லியன் தொகை பயனற்றதாகியிருந்தது.

**3.7 குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 195 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கண்டி மற்றும் காலி மாநகர சபைகள் மற்றும் நீர்ப்பசனத் திணைக்களம் என்பவற்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் உரிய சொத்துக்களை பயன்படுத்துவதற்கான திட்டமொன்று இல்லாமையினால் 2018 ஏப்ரல் 30 வரையிலும் அவை உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் மேற்குறிப்பிடப்பட்ட அலுவலக வளாகங்களில் காணப்பட்டன. மேலும், ரூபா 120 மில்லியன் கிரயத்தில் 2016 இல் கொள்வனவு செய்யப்பட்ட குழாய்கள் மற்றும் துணைக்கருவிகளின் இருப்பு 2018 ஏப்ரல் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வளாகத்தில் பயனற்றிருந்தன.

**3.8 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 13 பதவிகளிற்கான 158 உத்தியோகத்தர்களை கொண்டிருந்த போதிலும் 02 ஆண்டுகளிற்கு மேலாக மேலதிக செயற்திட்டப் பணிப்பாளர், பிரதிச் செயற்திட்டப் பணிப்பாளர்களின் 07 முக்கிய பதவிகளிற்கான உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 64 உத்தியோகத்தர்களிற்கு காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளிற்கு மேலாக உதவி செயற்திட்டப் பணிப்பாளர் பதவிக்கான 14 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்பபடுத்துதலின் மெதுவான செயன்முன்னேற்றத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட பதவியணிப் பற்றாக்குறைகளானது பிரதானமாக செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

(ஆ) மேலும், செயற்திட்டமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 ஆம் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு சுற்றாடல் நடவடிக்கைகளை கையாளுவதில் போதியளவு அனுபவங்களை கொண்டிராத பிரதி செயற்திட்டப் பணிப்பாளரை வேலையிலீடுபடுத்தியிருந்தது. மேலும், செயற்திட்டமானது ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்தல் தொடர்பான பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் சமூக பாதுகாப்பு நோக்கங்களிற்காக பொருத்தமான தகமைகளுடனான உத்தியோகத்தர்களை வேலையிலீடுபடுத்தியிருக்கவில்லை.

**3.9 காணிகளின் சுவீகரிப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 274.8 மில்லியன் தொகையான சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீதான மொத்த இழப்பீட்டுக் கிரயத்தில் ரூபா 98.6 மில்லியன் தொகை மாத்திரம் காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நியதிச்சட்ட கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது. காணி சுவீகரிப்பு மீள்குடியேற்றல் குழுவின் சிபாரிசுகளை அடிப்படையாகக்கொண்டு ரூபா 176.2 மில்லியன் மீதித் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 172 மில்லியன் கூட்டுத்தொகையான மேலதிகக் கொடுப்பனவுகள் சலுகை அடிப்படையில் இழப்பீட்டைப் பெற்றிருந்த அதே காணி உரிமையாளர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மேலதிகக் கொடுப்பனவுகளிற்கான காரணங்கள் கணக்காய்விற்காக விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது யாழ்ப்பாணத்தின் நகரப் பகுதியிலுள்ள 02 வீதிகளின் புனரமைப்பு நோக்கத்திற்காக மீளாய்வாண்டின் போது 332 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு பட்டியலிட்டிருந்த போதிலும் காணித்துண்டுகள் எதுவும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.